**உதவி அமர்வு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திரு. C.B. வேதகிரி, B.Pharm, MS.–IT (Aus), L.L.M.,**
**உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி.**

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண். 102/2019**

**CNR No. TNMY06-000421-2022**

(சீர்காழி, குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால்
முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.28/2013ன்படி மேல்
விசாரணைக்காக
அனுப்பி வைக்கப்பட்டது)

**சீர்காழி மதுவிலக்கு அமல் பிரிவு குற்ற எண்.121/2012**

| வ.எண் | தலைப்பு | | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | : | சீர்காழி மதுவிலக்கு அமல் பிரிவு குற்ற எண்.121/2012 |
| 2 to 7 | எதிரிகளின் விபரங்கள் (பெயர், தந்தை பெயர், தொழில், இருப்பிடம் & முகவரி | : | 1. பன்னீர்செல்வம், வயது 39/2019<br>த/பெ. பெருமாள்<br>நெ.59 முத்துவேல் நகர்,<br>ஊரப்பாக்கம், சென்னை – 48.<br><br>2. ராமு (எ) ராதாகிருஷ்ணன்<br>வயது 41/2019<br>த/பெ. ராமசாமி நாடார்,<br>கதவு எண். பழை எண்.10<br>புதிய எண்.17, வெள்ளான் தெரு,<br>திருப்பட்டினம்<br>காரைக்கால்.<br>தற்போதைய முகவரி.<br>நெ.17, 2–வது குறுக்குத் தெரு,<br>எம்.எஸ்.பி. நகர்<br>காரைக்கால். (இறந்தார்) |

| | | | |
|---|---|---|---|
| | | | 3. தியாகராஜன், வயது 40/2019,<br>த/பெ. பெரியசாமி நாடார்,<br>3வது குறுக்குத் தெரு,<br>நேதாஜி நகர்,<br>காரைக்கால்.<br><br>4. முருகன், வயது 40/2019,<br>த/பெ. கமலா மாரிமுத்து,<br>34, வண்டிக்காரத் தெரு,<br>காரைக்கால். |
| 8 | குற்றம் நடைபெற்ற நாள் | : | 03.02.2012 |
| 9 | புகார் கொடுத்த நாள் | : | 03.02.2012 |
| 10 | எதிரிகளையை கைது செய்த நாள் | : | 1 வது எதிரி– 04.02.2012<br>2வது எதிரி– 05.5.2012<br>3வது 31.05.2012ம் தேதியில் முன் பிணை பெற்றுள்ளார்<br>4வது எதிரி –03.03.2012 |
| 11 | எதிரிகளை பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 1 வது எதிரி–21.03.2012<br>2வது எதிரி–16.07.2012<br>3வது 31.05.2012ம் தேதியில் முன் பிணை பெற்றுள்ளார்<br>4வது எதிரி –21.03.2012 |
| 12 | விசாரணை நீதிமன்றம் முதலேற்பு செய்த நாள் | : | 17.02.2020 |
| 13 | சாட்சி விசாரணை தொடங்கிய நாள் | : | 17.02.2020 |
| 14 | சாட்சி விசாரணை நிறைவுற்ற நாள் | : | 30.07.2026 |
| 15 | தீர்ப்பு வழங்கிய தேதி | : | 13.08.2026 |
| 16 | தீர்ப்பின் நகல் வழங்கிய தேதி | : | 13.08.2026 |
| 17 | காலதாமத்திற்கான காரணம் | : | --- |
| காவல் துறையினரால் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றசாட்டுகள் | | : | U/S. 4(1) (aaa) r/w 4(1–A) TNP Act 5 &6 TNRS Rules 1955 (Transport) |

| | | |
|---|---|---|
| எதிரிகளின் பதிலுரை | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் மற்றும் தீர்ப்புரை பற்றிய விபரம் | : | **முடிவாக,** 1, 3 மற்றும் 4 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 4-1(aaa) r/w 4-1(A) TNP Act and 5 & 6 TNRS Rules 1955 (transport) கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து ஆஜர் 1, 3 மற்றும் 4 எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் 2வது எதிரி இறந்துவிட்டதால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய்விட்டன.<br>இவ்வழக்கில் SCP.No.14/2026ல் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலான சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.<br>இவ்வழக்கில் சா.பொ.1 – Ashok Leyland Tanker Lorry தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 14(4)ன் படி போலியான ஆவணங்கள் மற்றும் பதிவு எண் கொண்ட TN 59 M 6849 Ashok Leyland Lorry வாகனத்தை பறிமுதல் செய்து அரசுடைமையாக்கப்படுகிறது.<br>சா.பொ.2 லாரியில் கடத்தி வரப்பட்ட எரிசாரயம் மாதிரிக்கு ஒரு லிட்டர் எடுத்து பகுப்பாய்வு கூடம் அனுப்பியது போக, எஞ்சிய 2999 லிட்டர் எரிசாரயத்தை 31.07.2012ந் தேதியில் கொட்டி அழிக்கப்பட்டது.<br>சா.பொ.3 – ரூ.7000/- பணமானது சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்தற்தில் C.P.No.8/2012 ஆக குறியீடு செய்யப்பட்டு, மேற்படி தொகையானது 22.04.2025ம் தேதியில் அரசுக்கு ஆதாயம் தேடும் வகையில் Challan மூலம் அரசுக்கு கணக்கில் செலுத்தி அரசுடமையாக்கப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.102/2019ஆக கோப்பில் எடுக்கப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இவ்வழக்கு 04.08.2026 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது அரசுக்காக கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. A.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சேகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## தீர்ப்புரை

1. இவ்வழக்கில் கடந்த 03.02.2012ம் தேதி 23.45 மணிக்கு சீர்காழி காவல் சரகம் சீர்காழி மேல செங்கமேடு பைபாஸ் ரோட்டில் சீர்காழி வட்ட காவல் ஆய்வாளர் மற்றும் அவரது போலீஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்த போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த Tanker Lorry Reg. No.TN59M 6849 (போலியான பதிவு எண். TVS XL Super என்ற வாகனத்திற்குரியது.) என்ற வாகனத்தில் சுமார் 3000 லிட்டர் விஷ நெடியுள்ள எரிசாரயத்தை முதல் எதிரியானவர் மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனராக இருந்து 3 மற்றும் 4வது எதிரிகள் உதவியுடன் 2 வது எதிரிக்கு கொடுப்பதாக கடத்தி வந்தார்கள் என்பது வாகன தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேற்படி விஷ நெடியுள்ள எரிசாரயத்தில் மாதிரிக்கு எடுத்து நீதிமன்றம் மூலம் பகுப்பாய்வு கூடம் தஞ்சாவூர் அனுப்பியும் கைப்பற்றப்பட்ட மாதிரி விஷ நெடியுள்ள எரிசாரயத்தில் 1.27% என்ற அளவில் அட்ரோபின் கலந்துள்ளது என்று பகுப்பாய்வு முடிவில் கண்டறியப்பட்டது. எனவே விஷ நெடியுள்ள எரிசாரயத்தை கடத்திய குற்றத்திற்காக 1 முதல் 4 எதிரிகளின் மீது பிரிவுகள்

4(1) (aaa) r/w 1 (1–A) TNP Act 5 & 6 TNRS Rules 1955 (Transport)ன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக சீர்காழி மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் Cr.No.121/2012 படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. சீர்காழி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மேற்படி வழக்கினை தமது கோப்பில் மு.ப.வ.எண்.102/2019 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு வழக்கில் எதிரிகள் முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 209(அ)ன் கீழ் வழங்கி பரிசீலனை செய்கையில் எதிரிகள் மீதான குற்றங்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றங்களாக இருந்ததால் இவ்வழக்கினை கு.வி.மு.ச. பிரிவு 209(அ)ன்படி மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

3. நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன் 1, 3 மற்றும் 4 எதிரிகளின் மீது 4(1) (aaa) r/w 1 (1–A) TNP Act 5 & 6 TNRS Rules 1955 (Transport)ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்து காண்பித்து விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். ஆகையால் வழக்கு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் ச.பொ.3 வரையிலான சான்று பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் 2வது எதிரி இறந்துவிட்டதால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டன.

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 வெற்றிவேல் தனது சாட்சியத்தில் அவர்

தற்போது சட்டநாதபுரத்தில் வசிப்பதாகவும், கிராம உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளதாகவும், சாட்சி கலியமூர்த்தியை தெரியும், எதிரிகளை தெரியாது, வழக்கு பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது. தான் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்றும், தன் முன்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியான அ.சா.2 கலியமூர்த்தி தனது சாட்சியத்தில் அவர் தற்போது சட்டநாதபுரத்தில் வசிப்பதாகவும், கிராம உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளதாகவும், சாட்சி வெற்றிவேலையை தெரியும், எதிரிகளை தெரியாது, வழக்கு பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது. தான் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்றும், தன் முன்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியான அ.சா.3 மதியழகன் தனது சாட்சியத்தில் அவர் தற்போது சூரக்காட்டில் வசித்து கொத்தனாராக வேலை பார்த்து வருவதாகவும், சாட்சி அழகரை தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும் வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், தன் முன்பாக போலிசார் எந்த இடத்தையும் பார்வையிடவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 சிங்காரவேலன் தனது சாட்சியத்தில் அவர் தற்போது திருக்கடையூரில் வசித்து கொத்தனாராக வேலை பார்த்து வருவதாகவும், சாட்சி குணசேகரனை தெரியும் என்றும், எதிரி முருகனை

தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி ஒன்றும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் எதிரி முருகனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், தன் முன்பாக போலிசார் யாரையும் கைது செய்யவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அரசு தரப்பு சாட்சியான அ.சா.5 அழகர் தனது சாட்சியத்தில் அவர் தற்போது சூரக்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருவதாகவும், மதியழகன் என்பவரை தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் கேட்டதால் போட்டேன் என்றும், எதற்காக என்று தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சியான அ.சா.6 ராஜேஷ் தனது சாட்சியத்தில் அவர் தற்போது மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வராளராக பணியாற்றி வருவதாகவும், கூடுதல் பொறுப்பாக சீர்காழி மதுவிலக்கு அமல் விலக்கு பிரிவிற்கு ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், காவல் துரையில் பணிபுரிந்த வகைரயில் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி, பக்கிரிசாமி, ராஜேந்திரன், ராதாகிருஷ்ணன் மற்றும் காவல் ஆய்வாளர் மகேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் கையொப்பம் நன்கு தெரியும் என்று ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 12.02.2012ம் தேதி 14.00 மணிக்கு மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளர் S.K. ரவி என்பவர் நிலைய பொருப்பில இருந்த போது நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவு படி சீர்காழி காவல் நிலைய பொது நமுனா எண். 17/D1 PS/2012 நாள் 12.02.2012 ன் படி சீர்காழி காவல் நிலைய குற்ற எண். 50/2012 U/s. 4-1(aaa) r/w 4-1(A) TNP Act and 5 & 6 TNRS Rules and Transport 1955 ( transport) ன் படி பம்பந்தபட்ட வழக்கு கோப்பு மற்றும்

வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயம் மற்றும் ஆவணங்களுடன் அனுப்பப்பட்டதை பெற்று மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவு குற்ற எண். 121/2012 U/s. 4-1(aaa) r/w 4-1(A) TNP Act and 5 & 6 TNRS Rules 1955 (transport) ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 தயார் செய்து, மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், அதனை காவல் ஆய்வாளர் ராஜேந்தின் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கு கோப்பினை பார்வையிட்டு கடந்த 03.02.2012ம் தேதி இரவு 23.45 மணிக்கு சீர்காழி வட்ட காவல் ஆய்வாளராகிய மகேந்தின், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பக்கிரிசாமி, ராஜேந்திரன், ராதாகிருஷ்ணன் மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம், சீர்காழி காவல் சரகம் செங்கமேடு பைாஸ் ரோட்டில் வாகன தணிக்கை செய்த போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த TN59M6849 அஷோக் லேலாண்ட் டேங்கர் லாரியை நிறுத்திய போது நிறுத்தாமல் சென்றால் பார்ட்டி சகிதம் நிறுத்தி பிடித்து சோதனை செய்யததில் அதில் 3000 லிட்டர் எரிசாராயம் இருந்ததாகவும், மேற்படி டேங்கர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுனரை பற்றி விசாரித்தபோது பன்னீர்செல்வம் த/பெ.பெருமாள், முத்துவேல் நகர், ஊரப்பாக்கம், சென்னை என கூறியதாகவும், அந்த எரி சாராயத்தை எடுத்து வர அவரிடம் எந்த விதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என சொன்னவரை 04.02.2012 ம் தேதி அதிகாலை 15.00 மணிக்கு கைது செய்தும் 04.12.2012-ம் தேதி 00.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், 13 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் வழக்கு தடயங்களான அஷோக் லேலாண்ட் லாரி TN59M6849, வாகன பதிவு சான்று, வாகன அனுமதி சான்று, வாகனா காப்பீட்டு சான்று, வாகன போக்குவரத்து வரி சான்று, 3000 லிட்டர் விஷ நெடியுடைய சாராயம், 7000/- ரூபாய் பணம், கைப்பற்றிய எரிசாரயத்தில் இருந்து மாதிரிக்கு சுமார் 750 ml பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 ml வீதம் எடுத்து SHO சீல் வைத்த பாட்டில்கள்-2

கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆகவும், பின்னர் எதிரி மற்றும் தடயங்களுடன் 04.02.2012ம் தேதி அதிகாலை 2.30 மணிக்கு நிலையம் வந்து சீர்காழி காவல் நிலைய குற்ற எண். 50/2015 U/s. 4–1(aaa) r/w 4–1(A) TNP Act and 5, 6 TNRS Rules 1955 (transport) ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்னர் 04.02.2012ம் தேதி காலை 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அழகர் மற்றும் மதியழகன் ஆகியேர்கள் முன்னிலையில் பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்து, சாட்சிகள் வெற்றிவேல், கலியமூர்த்தி, அழகர், மதியழகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரி பன்னீர்செல்வத்தை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், கைப்பற்றிய எரி சாராயத்தில் இருந்து மாதிரிக்கு சுமார் 750 ml பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500ml வீதம் எடுத்து SHO சீல் வைத்த பாட்டில்கள் 2 மற்றும் 7000/– ரூபாய் பணம், 1000 ரூபாய் நோட்டுகள்– 4, 500 ரூபாய் நோட்டுகள் –6 ஆகியவைகள் படிவம் 95 அ.சா.ஆ.3ன் மூலம் நீதிமன்றம் அனுப்பி CP No.8/2012 பெறப்பட்டு, TN59M6849 அஷோக் லேலாண்ட் மற்றும் டேங்கர் லாரி மற்றும் 2999 லிட்டர் சாரயம் ஆகியவை படிவம் 95 அ.சா.ஆ.8ன் மூலம் நீதிமன்றம் அனுப்பி CP.No.50/2012 பெறப்பட்டதாகவும், காவல் ஆயவாளர் ராஜேந்திரன் மற்ற எதிரிகளை தேடி சென்ற போது 02.03.2012ம் தேதி 13.00 மணிக்கு ஆக்கூர் முக்கூட்டில் வழக்கின் மற்றொரு எதிரி முருகன் என்பவரை கைது செய்தும் தனிநபர் சாட்சிகள் சிங்காரவேலன், குணசேகரன், ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானகவே கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், பின்னர் அவர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டதாகவும், சாட்சிகள் சிங்காரவேலன் மற்றும் குணசேகரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அழித்தல் கோரிக்கை அ.சா.ஆ.9னை பெற்று மற்றும் அ.சா.11 பெற்று, அழித்தல் மகசர் அ.சா.ஆ.10 தயார் செய்து

மயிலாடுதுறை பழைய ரயில்வே லையன் சீத்தவாய்க்கால் என்ற இடத்தில் வழக்கில் கைப்பற்றப்பட்ட 2999 லிட்டர் எரி சாரயத்தை நீதிமன்ற உத்தரவு படி 31.07.2012ம் தேதி பாதுகாப்பாக கொட்டி அழிக்கப்பட்டது என்றும், TN59M6849 அஷோக் லேலாண்டு லாரி மற்றும் அரசுக்கு ஆதாயம் செய்யும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், இவ்வழக்கில் மற்றொரு எதிரியான ராமு (எ) ராதாகிருஷ்ணன் என்பவர் வேறு ஒரு வழக்கில் மயிலாடுதுறை அமல் பிரிவு குற்ற எண். 320/2012 U/s.4–1 (aaa) 4–1 (A) Act ன் கீழ் கைது செய்யப்பட்டு மயிலாடுதுறை கிளை சிறையில் விசாரணை கைதியாக இருந்த வரை காவல் ஆய்வாளர் ராஜேந்திரன் 03.05.2012ம் தேதி நீதிமன்ற உத்தவு படி சம்பிரதாய கைது செய்து நீதிமன்றம் மூலம் PT Warrant பெற்றும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு வழக்கில் உட்படுத்தபட்டார் என்றும், மேலும் வழக்கின் மற்றொரு எதிரியான தியாகராஜன் என்பவர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றிருந்தபடியால் அவரை கைது செய்யவில்லை என்றும், மாதிரிக்கு சுமார் 750 லிட்டர் பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டிலகளில் தலா 500 ml வீதம் எடுத்து SHO seal வைத்து பாட்டில்கள் 2 தஞ்சாவூர் ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி பகுப்பாய்வு சான்று பெறப்பட்டது என்றும், பகுப்பாய்வு அறிக்கையில் 1.27 % அளவு அட்ரோபின் கலந்து இருப்பதாக பகுப்பாய்வு அறிக்கையை அ.சா.ஆ. 12 அளித்த திருமதி.காயத்திரி உதவி இயக்குனர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் தஞ்சாவூர் என்வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பகுப்பாய்வு அறிக்கையை வைத்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனை குடியுரிமை முதன்மை மருத்துவர் டாக்டர் மகேந்திரன் தனது கருத்துரை வழங்கியுள்ளதாகவும், கருத்துரை அ.சா.ஆ.13 வழக்கிய மருத்துவரை விசரணை செய்து வாக்குமூலம் பெற்று, இவ்வழக்கில் சான்று பொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டு, வழக்கின் விசாரணையினை முடித்து மேற்படி

எதிரிகள் மீது குற்ற எண். 121/2012 U/s. U/s. 4–1(aaa) r/w 4–1(A) TNP Act and 5, 6 TNRS Rules 1955 (transport)ன் கீழ் 14.08.2012ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

10. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து 1, 3 மற்றும் 4 எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன்படி கேள்வி எழுப்ப எதிரிகள் அவற்றை பொய் சாட்சிகள் என மறுத்தும், வழக்கு குறித்து பொய் வழக்கு என தெரிவித்தும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென தெரிவித்தார்கள். இவ்வழக்கில் 2வது எதிரி இறந்துவிட்டதால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய்விட்டன.

11. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u>**

ஆஜர் 1, 3மற்றும் 4 எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள். 4–1(aaa) r/w 4–1(A) TNP Act and 5, 6 TNRS Rules 1955 (transport)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>12. தீர்வு:–</u>**

அரசுத்தரப்பு வழக்கானது இவ்வழக்கின் கடந்த 03.02.2012ம் தேதி 23.45 மணிக்கு சீர்காழி காவல் சரகம் சீர்காழி மேல செங்கமேடு பைபாஸ் ரோட்டில் சீர்காழி வட்ட காவல் ஆய்வாளர் மற்றும் அவரது போலீஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்த போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த Tanker Lorry Reg. No.TN59M 6849 (போலியான பதிவு எண். TVS XL Super என்ற வாகனத்திற்குரியது.) என்ற வாகனத்தில் சுமார் 3000 லிட்டர் விஷ நெடியுள்ள எரிசாரயத்தை முதல் எதிரியானவர் மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனராக இருந்து 3 மற்றும் 4வது எதிரிகள் உதவியுடன் இறந்தபோன 2 வது எதிரிக்கு கொடுப்பதாக கடத்தி வந்தார்கள் என்பது வாகன தணிக்கையில்

கண்டறியப்பட்டு, மேற்படி விஷ நெடியுள்ள எரிசாரயத்தில் மாதிரிக்கு எடுத்து நீதிமன்றம் மூலம் பகுப்பாய்வு கூடம் தஞ்சாவூர் அனுப்பியும் கைப்பற்றப்பட்ட மாதிரி விஷ நெடியுள்ள எரிசாரயத்தில் 1.27% என்ற அளவில் அட்ரோபின் கலந்துள்ளது என்று பகுப்பாய்வு முடிவில் கண்டறியப்பட்டது என்றும், எனவே விஷ நெடியுள்ள எரிசாரயத்தை கடத்திய குற்றத்திற்காக 1 முதல் 4 எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 4(1) (aaa) r/w 1 (1–A) TNP Act 5 & 6 TNRS Rules 1955 (Transport)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. இவ்வழக்கில் 2வது எதிரி இறந்துவிட்டப்படியால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டன.

13. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கில் டேங்கர் லாரியை ஓட்டி வந்த டிரைவரை கைது செய்தது பற்றியும், லாரியில் உள்ள விஷ நெடியுள்ள எரிசாராயத்தை கைப்பற்றியும், சம்பவ இடத்தில் நடைபெற்ற விபரங்கள் பற்றியும் அப்போது சட்டநாதப்புரத்தில் கிராம உதவியாளராக பணியாற்றியவர்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், தாங்கள் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்றும், தங்களுக்கு முன்பாக யாரையும் கைது செய்யப்படவில்லை, எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், போலிசார் தங்களை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்கள். இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபட சாட்சிகளாக அ.சா.3 மற்றும் அ.சா.5 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.3 தம்முடைய சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியுள்ளார். மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து

தன்னுடையது தான் என்றும், அது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் கேட்டதால் போட்டதாகவும், எதற்காக என்று தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். மேலும் இவ்வழக்கில் 4வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட்ட சாட்சியாக அ.சா.4 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் எதிரி முருகனை தனக்கு தெரியாது என்றும், சம்பவம் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் எதிரி முருகனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், போலிசார் தன் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியுள்ளார். இவ்வழக்கின் சம்பவயிட சாட்சிகள், பார்வை மகசர் சாட்சிகள் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சிமளிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள்.

14. இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட தற்போதைய மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் ராஜேஷ் என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 தம்முடைய சாட்சியத்தில் எதிரிகளிடமிருந்து எரிசாராயத்தை கைப்பற்றி வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.1 பதிவு செய்தது குறித்தும், எதிரிகளிடமிருந்து தடயப்பொருட்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 தயார் செய்தது குறித்தும், கைப்பற்றிய தடயப்பொருட்களை படிவம் 95 அ.சா.ஆ.3, அ.சா.ஆ.8ன் மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தது குறித்தும், சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்தது குறித்தும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2ல் சான்று பொருள் சா.பொ.1முதல் சா.பொ.4 வரையிலான சான்றுபொருட்களை கைப்பற்றியது குறித்தும், கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்களுக்கு அழித்தல்

அறிக்கை அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.11யை பெற்று அழித்தல் மகசர் அ.சா.ஆ.10 தயார் செய்து தடயப்பொருட்களை அழித்தது பற்றியும், தடயப்பொருட்களின் ஒருபகுதியை பகுப்பாய்வுக்கு அனுப்பு பகுப்பாய்வு சான்று அ.சா.ஆ.12 பெற்றது குறித்தும், மருத்துவரை விசாரணை செய்து மருத்துவ கருத்துரை அ.சா.ஆ.13 பெற்றது குறித்தும் கைப்பற்ற தடயப் பொருளை நீதிமன்றத்திற்கு படிவம் 95 அ.சா.ஆ.3, அ.சா.ஆ.8ன் மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தது குறித்தும், ஆஜர் எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சிமளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை ஒருசேர பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் சம்பவயிட சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள். மேலும் அ.சா.3 மற்றும் அ.சா.4 பார்வை மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தங்களுடையதல்ல என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள். இவ்வழக்கில் சம்பவயிட சாட்சியான மற்றொரு பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதி செய்யும் வகையில் அமையவில்லை. மேலும் சம்பவயிட சாட்சிகள் மற்றும் கைப்பற்றுதல் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் சாட்சிகள் 6 முதல் 10 மற்றும் மருத்துவர் பட்டில் சாட்சி 11 மற்றும் இவ்வழக்கை விசாரணை மேற்கொண்ட விசாரணை அதிகாரிகள் பட்டியல் சாட்சிகள் 12, 13 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும் அ.சா.5ன் சாட்சியம் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது. எனவே அ.சா.5ன் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு ஆஜர் எதிரிகள் இவ்வழக்கின் குற்றச் சம்பவத்தோடு தொடர்புபடுத்த இயலாது என்று

தீர்மானிக்கப்படுகிறது. எனவே 1, 3 மற்றும் 4 எதிரிகளின் மீதான சட்டப்பிரிவுகள் 4−1(aaa) r/w 4−1(A) TNP Act and 5 & 6 TNRS Rules 1955 (transport)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூப்பிக்கப்படவில்லை என்று தீர்மானித்து ஆஜர் எதிரிகள் இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, ஆஜர் 1, 3 மற்றும் 4 எதிரிகள் இக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று தீர்மானித்து இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

16. **முடிவாக,** 1, 3 மற்றும் 4 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 4−1(aaa) r/w 4−1(A) TNP Act and 5 & 6 TNRS Rules 1955 (transport) கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து ஆஜர் 1, 3 மற்றும் 4 எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் 2வது எதிரி இறந்துவிட்டதால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய்விட்டன.

இவ்வழக்கில் SCP.No.14/2026ல் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலான சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வழக்கில் சா.பொ.1 − Ashok Leyland Tanker Lorry தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 14(4)ன் படி போலியான ஆவணங்கள் மற்றும் பதிவு எண் கொண்ட TN 59 M 6849 Ashok Leyland Lorry வாகனத்தை பறிமுதல் செய்து அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

சா.பொ.2 லாரியில் கடத்தி வரப்பட்ட எரிசாரயம் மாதிரிக்கு ஒரு லிட்டர் எடுத்து பகுப்பாய்வு கூடம் அனுப்பியது போக, எஞ்சிய 2999 லிட்டர் எரிசாரயத்தை 31.07.2012ந் தேதியில் கொட்டி அழிக்கப்பட்டது.

சா.பொ.3 − ரூ.7000/− பணமானது சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்தற்தில் C.P.No.8/2012 ஆக குறியீடு செய்யப்பட்டு, மேற்படி

தொகையானது 22.04.2025ம் தேதியில் அரசுக்கு ஆதாயம் தேடும் வகையில் Challan மூலம் அரசுக்கு கணக்கில் செலுத்தி அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.08.13 18:21:06 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சீர்காழி.

**சாட்சிகள் சான்றாவணங்கள் பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. வெற்றிவேல் |
| அ.சா.2 | திரு. கலியமூர்த்தி |
| அ.சா.3 | திரு. மதியழகன் |
| அ.சா.4 | திரு. சிங்காரவேலன் |
| அ.சா.5 | திரு. அழகர் |
| அ.சா.6 | திரு. ராஜேஷ் காவல் ஆய்வாளர், மயிலாடுதுறை |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.3 | படிவம் –95 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |

| | |
|---|---|
| அ.சா.ஆ.6 | எதிரி முருகன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | எதிரி பன்னீர்செல்வம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 | 2வது படிவம் 95 |
| அ.சா.ஆ.9 | அழித்தல் கோரிக்கை |
| அ.சா.ஆ.10 | அழித்தல் மகசர் |
| அ.சா.ஆ.11 | அழித்தல் அறிக்கை |
| அ.சா.ஆ.12 | பகுப்பாய்வு அறிக்கை |
| அ.சா.ஆ.13 | மருத்துவரின் கருத்துரை |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:</u>**

| | |
|---|---|
| சா.பொ.1 | Ashok Leyland Tanker Lorry<br>(தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 14(4)ன் படி போலியான ஆவணங்கள் மற்றும் பதிவு எண் கொண்ட TN 59 M 6849 Ashok Leyland Lorry வாகனத்தை பறிமுதல் செய்து அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. ) |
| சா.பொ.2 | 3000லிட்டர் எரிசாராயம்<br>(லாரியில் கடத்தி வரப்பட்ட எரிசாரயம் மாதிரிக்கு ஒரு லிட்டர் எடுத்து பகுப்பாய்வு கூடம் அனுப்பியது போக, எஞ்சிய 2999 லிட்டர் எரிசாரயத்தை 31.07.2012ந் தேதியில் கொட்டி அழிக்கப்பட்டது.) |
| ச.பொ.3 | ரூ. 7,000/-<br>(ரூ.7000/- பணமானது சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்தற்தில் C.P.No.8/2012 ஆக குறியீடு செய்யப்பட்டு, மேற்படி தொகையானது 22.04.2025ம் தேதியில் அரசுக்கு ஆதாயம் தேடும் வகையில் Challan மூலம் அரசுக்கு கணக்கில் செலுத்தி அரசுடமையாக்கப்பட்டுள்ளது. ) |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** -இல்லை-

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.08.13 18:21:17 +0530

உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி.

நேரிய /வரைவு தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண்.102/2019
நாள் . 13.08.2026